
# சாளரம்

ஓகஸ்ற் - செப்ரெம்பர் 1995



விலை 20/

## கொடிகாமம் அரைக்கும் ஆலை

- புழுங்கல் நெல்குற்றல்
- மிளகாய், அரிசி, குரக்கன், உழுந்து மற்றும், தானியங்கள் அரைத்துப் பெற்றிட எம்மிடம் வாருங்கள்.

எமது தரமான சேவையைப் புரிந்து கொள்வீர்கள்!

# கொடிகாமம் அரைக்கும் ஆலை

பருத்தித்துறை சாலை, கொடிகாமம்.


---

மீசாலையில்.........

★ நெல்குற்றல், அரிசி, குரக்கன், உழுந்து சாமை போன்றவற்றை நல்ல முறையில் மாவாக அரைத்துப் பெற்றிட, நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்.

# கிருஷ்ணா அரைக்கும் ஆலை

வரணி சாலை, மீசாலை வடக்கு,
மீசாலை



இந்தப் படத்திற்கு
உங்கள் கவிதையை
எழுதி அனுப்புங்கள்.

---

### விலை மாற்றம்

இந்த இதழிலிருந்து சாளரத்தின் விலை 20 ரூபா. பத்திரிகைத் தாளின் அசுர விலையேற்றத்தினால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத நிலைஇது. எப்போதோ செய்திருக்க வேண்டிய இந்த விலை மாற்றத்தை சாளரம் சற்றுப் பிந்தியே செய்கிறது என்பதை வாசகர்கள் புரிந்துகொள்வீர்கள்.

தொடர்ந்தும் உங்கள் ஆதரவை சாளரம் எதிர்பார்க்கிறது.

---

## இந்த இதழில்


- ''அனுபவங்களின் இந்த முதிர்ச்சிநிலையில்தான், நான் இயக்கத்தை ஆரம்பித்தேன்''
- ஐ. தே. க. வின் எஸ். ரி. எஃப். ஐ, சு. க. வின் எஸ்.ரி. எஃப். ஆக. மாற்றுவது
- வெற்றிமுறை ஆலோசகர் எம். ஆர். கோப்மேயர்
- அமெரிக்காவின் பொருளாதாரத் தடையும், அசைந்து கொடுக்காத கியூபாவும்
- உறவுகள் (சிறுகதை)

இன்னும் பல அம்சங்கள்


---

களைத்துப்போனவனின் இறுதி ஆயுதமாக உணவுப் போர் எமது மக்கள்மீது தொடுக்கப்படலாம். பட்டினித்தீயால் மக்களின் மனவுறுதியைச் சுட்டெரிக்க எதிரி முயற்சிக்கலாம். ஆனால், சுதந்திரப் பசியில் உறுதிபூண்ட மக்களைச் சோற்றுப்பசி தீண்டிவிடப்போவதில்லை.

– தேசியத் தலைவர்
வே. பிரபாகரன்.

# இரண்டு போர்கள்

தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிக்க சிறீலங்கா அரசு எந்தளவு முனைப்புக்காட்டுகின்றதோ, அதேயளவு முனைப்பைத் தமிழர்கள் மீதான பொருண்மியத்தடை நடவடிக்கைகளிலும் காட்டுகின்றது.

உணவு மற்றும், அத்தியாவசியப் பொருட்களுக்கான தடை, இந்த மண்ணில் உற்பத்தி நடைபெறாதவண்ணம் விவசாய இடுபொருட்கள் மீதான தடை. இவ்விரண்டிலும், இரண்டாவதே முக்கியமானது.

உணவோ, அத்தியாவசியமான வேறு ஒரு பொருளோ தொடர்ச்சியாகக் கிடைக்காதபோது, அத்தடைசெய்யப்பட்ட பொருட்களைச் சொந்த மண்ணிலேயே உற்பத்தி செய்ய முனையும் மக்களது செயற்பாடானது தவிர்க்க முடியாததும் இயல்பானதுமாகும். அவ்வாறு செய்ய ,விழையும் போது, ஒடுக்கு முறை செய்யும் சக்திக்கு அது சாதகமற்ற எதிர்விளைவுகளை உண்டுபண்ணுகின்ற ஒரு செயற்பாடாகவே அமைந்து விடும்.

அதனால், இச்செயற்பாட்டைத் தடுக்கும் விதத்திலேயே சிங்கள அரசு உரப்பசளை போன்ற விவசாய இடுபொருட்களுக்குத் தடையும், கட்டுப்பாடுகளும் விதித்து வருகின்றது. பட்டினி போட்டுப் பணியவைக்கும் சூழ்ச்சி, ஓர் இராணுவ நடவடிக்கையிலும் பார்க்க மோசமானது என்றே கூறலாம்.

இந்நிலையில், மண்ணை ஆக்கிரமிக்கவரும் படையோடு போராளிகள் எவ்வாறு இரும்பைப்போன்ற உறுதியுடன் போராடுகின்றனரோ, அதேயளவு உறுதி, உற்பத்திப் போர்முனையில் பொதுமக்களுக்கும் வேண்டும்.

ஒடுக்கு முறைச் சிங்கள அரசு தடைவிதிக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் வேறு மாற்றீடுகளைக் கண்டறிந்து, உற்பத்தியில் வெற்றி கொள்ள வேண்டும்.


தமிழீழ விடுதலைப் போரின் வரலாற்றில் இது முக்கியமானதொரு காலகட்டம். சிங்கள அரசிடமிருந்து ஒரு துரும்பைக் கூட எதிர்பாராமல் வாழ்கின்ற வாழ்க்கை முறையை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

சிங்கள அரசு தமிழர் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் இவ்விரண்டு போர்களிலும் இணையாக நாம் வெற்றி கொள்ளும்போதே, இந்த மண்ணில் எமது சுதந்திரமான இருப்பு நிலையானதாகும்.

# "அனுபவங்களின் இந்த முதிர்ச்சி நிலையில்தான் நான் இயக்கத்தை ஆரம்பித்தேன்"

சிறுவயது முதல் இந்தியப் போராட்ட வரலாறு என் னைக் கவர்ந்திருந்தது. இப்போ ராட்டத்தில் நேதாஜி அவர்கள் கொண்டிருந்த பங்கு என்னை ஆழமாகத் தொட்டது. அந்தக் ாலத்தில் நான் வீட்டில் மிகவும் ட்டுப்பாடான சூழலில்தான்

என்னை நெறிப்படுத்தியது. வெற் றிலை கூடப் போடமாட்டார். ஒழுக்கங்களை நான் அவரைப் பார்த்தே உருவாக்கிக் கொண் டேன். ஓர் அரச ஊழியராக, மாவட்ட நிலஅதிகாரியாக அவர் இருந்தார். என் தந்தையார் கொஞ்சமும் ஒளிவு மறைவு இல் லாதவர். நேர்மையாளர். எமது



ார்ந்தேன். வெளியாரோடு ந்து பழக எனக்கு அனுமதி ருக்கவில்லை. இளம் பெண்க ாக்கண்டால் வெட்கப்படுவேன். ் தந்தையின் நல்லொழுக்கம்

ஊர் மக்கள் இப்படிச் சொல்லிக் கொள்வார்கள்:- ''அந்த மனிதர் நடந்தால், அவர் காலின் கீழே உள்ள புல்லுக்குக் கூட நோகாது''. ஆம்; அப்படிப்பட்ட



தந்தைக்கு இப்படி ஒரு மகன் பிறந்தானே என்றுதான் மக்கள் பேசிக்கொண்டார்கள். அவர் கண்டிப்பானவராக இருந்தார். அதே வேளை நெஞ்சைத் தொடுகின்ற ஓர் ஆற்றலும் அவரிடம் இருந்தது. நண்பன் ஒருவனைப் போல், பக்கத்தில் உட்கார்ந்து நியாயங்களை எடுத்துச் சொல்லி, அவர் என்னை நல்வழிப்படுத்தினார்.

சுபாஸ் சந்திர போஸின் வாழ்க்கை என்னைப் பெரிதும் கவர்ந்தது. சிறுவனாய் இருந்த காலத்தில் காந்தி அடிகளின் உண்மை – பிரமச்சரியம் பற்றிய நூல்களைப் படித்தேன். சின்ன வயதிலேயே ஆன்மீகத்தைத் தேடிப்போய், ஈற்றில் துறவு வாழ்க்கையில் வெறுப்புற்றுத் திரும்பிய சுபாஸ் சந்திரபோஸை எனக்குப் பிடித்திருந்தது. ஆனாலும், வாழ்க்கையில் துன்பமும் தொல்லையும் சூழ்ந்த போதெல்லாம் அவர் மீண்டும் மீண்டும் ஆன்மீகத்தையே நாடினார். சுபாஸின் வாழ்க்கை மிகவும்

*தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய ஆரம்பகாலந் தொட்டு, தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் பல்வேறு பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டிகள், மற்றும் அறிக்கைகள் என்பன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. இதுவரை வெளியான அனைத்தையும் தொகுத்து 'எனதுமக்களின் விடுதலைக்காக' என்ற தலைப்பில் நூல் ஒன்று வெளிவந்துள்ளமை வாசகர்கள் அறிந்ததே. ஆனாலும், வாசகர்கள் அனைவருக்கும் அந்நூலை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. எனவே, தலைவர் அவர்களது பேட்டிகள், அறிக்கைகள் போன்றவற்றிலிருந்து முக்கியமான சிலவற்றை 'சாளரம்', வாசகர்களுக்காக அவ்வப்போது பிரசுரிக்கும்.*

*அந்தவகையில் இந்திய ஆங்கிலப் பத்திரிகையான 'இந்து'வுக்கு 1986ஆம் ஆண்டு (4-9-86, 5-9-86 இதழ்களில் பிரசுரமானது) அளித்த நீண்ட பேட்டியிலிருந்து ஒரு பகுதியை இந்த இதழில் தருகின்றோம்.*

என்னைக் கவர்ந்தது. என் நெஞ்சில் சுபாஸ் நிலைத்த மனிதனானார். அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் (நூல்வடிவில் வந்தவை) அப்படியே நெஞ்சில் பதிந்தன. ''கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரை என் மண்ணுக்காக நான் போராடுவேன்'' என்ற சுபாஷின் வீர உரையை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். நினைவுக்கு வரும் போதெல்லாம் இந்தச் சொற்கள் என் நெஞ்சைச் சிலிர்க்க வைத்தன. அடுத்து, ''பகவத்சிங்கின்'' வரலாறு என்னைக் ஆகர்சித்தது.

சுருக்கமாகச் சொன்னால், அநீதியாளர்களை மோதியவர்களின் வாழ்க்கை வரலாறுகளையே, அந்த நாட்களில் நான் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தேன்.

இதற்கெல்லாம் ஒரு காரணம் இருந்தது. எமது தாயகத்தில் சிங்களவர்கள் அப்போது எம்மை மிகவும் கொடுமையாக நடத்திக் கொண்டிருந்தார்கள். அக்கொடுமைகள் பற்றிய செய்திகள் அவ்வப்போது பத்திரிகைகளிலும் நூல்களிலும் வெளிவந்து கொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் 1958ல் நடைபெற்ற பயங்கர தமிழர் படுகொலைகள் பற்றி நான் படிக்க நேர்ந்தது. அந்த நிகழ்ச்சிகள் எத்தனை கொடூரமானவை தெரியுமா? கோயிலில் உறங்கிக் கொண்டிருந்த பூசை செய்யும்



ஒரு பிராமணரைத் தட்டி எழுப்பிய கொடிய சிங்களவர்கள் எண்ணெய் ஊற்றி எரித்துக் கொன்றார்கள். பாணந்துறை என்ற இடத்தில் இந்த நிகழ்ச்சி நடந்தது.

கடவுள் பக்தி உள்ள, சமய உணர்வுள்ள எமது மக்களின் கோயில் அர்ச்சகரையே கொன்றுவிட்டார்களே கொடியவர்கள். நாங்கள் ஏன் இவர்களைத் திருப்பித் தாக்கக் கூடாது? என்று எண்ணத் தலைப்பட்டோம். இந்த இன வெறிக்கலவரத்தில் இன்னொரு கொடுமையும் நிகழ்ந்தது. ஒன்றுந் தெரியாத பிஞ்சுத் தமிழ்க் குழந்தை ஒன்றைச் சிங்கள வெறியர்கள் துடிக்கத் துடிக்க தாரில் தோய்த்துக் கொன்றார்கள். இந் நிகழ்ச்சிகள், என் நெஞ்சிலும் என் நண்பர்கள் நெஞ்சிலும் அந்த சின்ன வயதிலேயே நெருப்பை மூட்டிற்று. ஒன்றுமறியாத அப்பாவிகளைக் கொல்கின்றார்களே. திருப்பி நாம் ஏன் இவர்களை ஓங்கி அடிக்கக் கூடாது? என்று எண்ணத் தொடங்கினோம்.

இந்தக் கால கட்டத்தில்தான் இந்தியப் போராட்ட வரலாறும் என் உணர்வுகளுக்கு எருவாயிற்று. ஒவ்வோர் ஆண்டும் இந்திய சுதந்திர நாளில் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இந்திய விடுதலைப் போராட்டம் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டு வந்தன. அவற்றைப் படிக்கும் வாய்ப்பு அப்பொழுது எனக்கு கிடைத்தது. திருப்பூர்க் குமரனை எடுத்துக் கொள்ளுங்கள். அவனுடைய அகிம்சையிலும் ஓர் இரும்பு உறுதி இருந்தது. ஆயுதப்போரின் அனுபவங்களைப் பற்றி நான் கற்றறிந்திருந்த அதே வேளை, அகிம்சைப் போரின் ஒழுங்குணர்வாலும் கவரப்பட்டேன். இப் போராட்டங்களில் காணப்பட்ட மன உறுதியும் துன்பங்களின் நடுவில் நிற்கும் துணிச்சலும் என்னை உணர்ச்சி வசப்படுத்தின. சின்ன வயதிலேயே இத்தகைய உணர்வுகளில் தோய்ந்துதான், சிந்திக்கத் தொடங்கினேன். 'நாமும் ஓர் ஆயுதப்போராட்டத்தைத் தொடங்கினால் என்ன?' நெப்போலியனின் எழுச்சி – வீரச் செயல்கள் பற்றி அன்று நான் படித்தவை இன்றும் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன-

மகாபாரதத்தில் வீமன், கர்ணன் ஆகிய கதா பாத்திரங்களைப் படித்தபோது ஒரு மன நிறைவு ஏற்பட்டது. பாரதத்தில் வரும் கதா பாத்திரங்களை ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதமாகப்பார்ப்பார்கள். தன்னிழப்புக்கு - உயிர்த் தியாகத்துக்கு ஒவ்வொரு மணித் துளியும் தயாராக இருந்தானே கர்ணன் – அவனை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. விவேகானந்தரின் பொன் மொழிகள் சில வற்றைப் படித்தேன். இளைஞர் அணி ஒன்றைத் திரட்ட வேண்டும் என்ற எண்ணம் மெல்ல அரும்பிற்று. ஆம், அப்பொழுது எனக்கு 16 வயதுதான்.

கிருபானந்த வாரியாரின் சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கின்றேன். அரசியற் கூட்டங்களுக்குப் போயிருக்கின்றேன். எங்களூர் மேடையில் அரங்கேறிய ''சோக்கிரடீஸ்'' போன்ற நாடகங்களைப் பார்த்திருக்கின்றேன்.

இப்படித்தான் நாங்கள் உருவாகினோம். எமது வரலாற்றுப் பின்னணியே எம்மை ஆயுத பாணிகள் ஆக்கிற்று. நாங்கள் சிந்தித்தோம். ஆயுதங்கள் இன்றி நாம் வெறுங்கையோடு பாதுகாப் பற்ற நிலையில் இருப்பதால் தானே, ஆயுதங்கள் உள்ள சிங்களவர்கள் கொடுமையாகத் தாக்குகின்றார்கள். நாம் ஏன் வெறுங்கைகளோடு இருக்கவேண்டும்? ஆயுதங்களை – ஆயுதங்களால் முறியடிப்போம்! ஆம்; அனுபவங்களின் இந்த முதிர்ச்சி நிலையில்தான் நான் இயக்கத்தை ஆரம்பித்தேன்.

வாவிச் சடலங்கள் விவகாரத்தின் பின்னணி

# ஐ. தே. க. வின் எஸ். ரி. எஃப். இனை, சு. க. வின் எஸ். ரி. எஃப். ஆக மாற்றுவது

ஐ. தே. க. வின் ஆட்சியில் நிகழ்ந்தது போலவே, சந்திரிகா வின் ஆட்சியிலும் கொழும்பு வாவி களில் இளைஞர்களின் சடலங்கள் மிதக்கலாயின. ஐ. தே. க. வின் ஆட்சியின் கீழ் சிங்கள இளைஞர் களின் சடலங்களும், தமிழ் இளை ஞர்களின் சடலங்களும் மிதந்தன. சந்திரிகாவின் ஆட்சியில் தமிழ் இளைஞர்களின் சடலங்கள் மட் டுமே மிதக்கின்றன.

வாவிகளிற் சடலங்கள் மிதப் பதைத் தடுப்பதற்கு, தனக்கு வாக் களிக்குமாறு சந்திரிகா கோரினார். தான் பதவிக்கு வந்தால், காணா மற்போவோர் என்றொரு நிகழ்வு இருக்காது என்று சந்திரிகா தேர் தற் காலத்தில் உறுதிஅளித்தார்.

ஆனால், சந்திரிகாவின் ஆட்சியில் நீண்ட காலமாய்ச் சடலங்கள் கொழும்பு வாவிகளில் மிதக்க லாயின. தலைநகரில் சடலங்கள் மிதப்பது இரசியமாக இருக்க முடியாது. பல பத்திரிகைகளில் சடலங்கள் மிதக்கும் செய்திகள் தொடர்ந்து வெளிவந்தன. இச் செய்திகள் சந்திரிகாவின் கண் ணுக்கும், காதுக்கும் எட்டாமல் இருந்திருக்க முடியாது. ஆனால், சந்திரிகா எதுவும் தெரியாதவர் போலவே நீண்டகாலம் இருந் தார்.

இப்போதுதான், திடீரெனத் தலைநகரச் செய்திகள் தெரிய வந்தவர் போல, வாவிகளில் மிதக்கும் சடலங்களுக்குப் பொறுப் பானவர்களைத் தேடிக்கண்டுபிடிப் பதில் சந்திரிகா ஈடுபட்டுள்ளார்.

'எஸ்.ரி. எஃப்.' என அழைக்கப் படும் விசேடபொலிஸ் அதிரடிப் படைப்பிரிவே, வாவிகளில் மிதக் கும் சடலங்களுக்குப் பொறுப் பென்று ''கண்டுபிடித்து'' அவர் கள்மீது விசாரணைகள் நடை பெறுகின்றன.

மனிதஉரிமை மீறல் பற்றிய குற்றச்சாட்டுக்கள் சந்திரிகா மீது சர்வதேச அரங்கில் வளர்வதால், அதிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காகச் சந்திரிகா இந்த விசாரணை நாடகத்தை அரங் கேற்றி உள்ளதாகப் பரவலாகக் கருதப்படுகின்றது.

— சரவணன் –

இதைப்பற்றி எனது நண்பர் ஒருவர் அபிப்பிராயம் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார்:- அதாவது, எஸ். ரி. எஃப் என்பது ஐ. தே. க. வின் உயர் குழாத்தவரைக் கொண்ட ஒரு படைப் பிரிவாகும். இந்தப் படைப்பிரிவு, ஐ. தே. க. ஆதரவாளர்களைக் கொண்டதும், ஐ. தே. க. வால் கட்டி எழுப்பப்பட்டதுமாகும். எனவே இந்த ஐ. தே. க. வின் எஸ். ரி. எஃப். ஐப் பலவீனப்படுத்த வேண்டிய தேவை சு. க. வின் சந்திரிகாவிற்கு உண்டு. எனவே, சடலங்கள் மிதப்பதைத் தடுப்பதல்ல சந்திரிகாவின் நோக்கம். இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, தனக்கு ஏற்ற விதத்தில் எஸ். ரி. எஃப். ஐப் பலவீனப் படுத்திக் கொள்வதுதான் சந்திரிகாவின் நோக்கம் என்று அவர் கூறினார்.

இந்தவகையில் இதனைப் பரிசீலிப்பது தவறில்லை என்றே தெரிகிறது. இப்படி விசாரணை நடத்துதலின் மூலம் மனித உரிமை மீறலைத் தடுக்கச் சந்திரிகா முயல்கின்றார் என்றொரு தோற்றத்தைச் சர்வதேச அரங்கில் ஏற்படுத்தலாம் என்பது உண்மைதான். ஆனால், சந்திரிகாவின் மூதற்தர நோக்கம், ஐ. தே. க. வின் எஸ் ரி.எஃப். ஐப் பலவீனப் படுத்துவதே என்று தெரிகிறது.

1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தபோது, இலங்கையில் ஐ. தே. க. வின் பொலிசும் ஐ. தே. க. வின் இராணுவமுமே இருந்தன. இதற்கு எதிராக சு. க. வின் படையைக் கட்டி எழுப்புவதற்கு, பண்டாரநாயக்கா ஒரு தந்திரத்தைக் கையாண்டார். அதாவது, எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் தமிழர் ஒரு பெரும் படையெடுப்புக்குத் தயாராகின்றார்கள் என்றும், சிங்களமக்களைப் பாதுகாக்க ஒரு இலட்சம் தொண்டர் படையைத் திரட்டவேண்டும் என்றும் கூறினார். (சமஷ்டிக் கட்சியின் திருமலை யாத்திரையை ஆதாரம் காட்டியே, பண்டாரநாயக்கா இப்படி தந்திரத்தை உருவாக்கினார்.) ஆனால் ஜே. ஆர். ஜெயவர்த்தனா இதனைப் பலமாக எதிர்த்துத் தடுத்துவிட்டார்.

எப்போதும் ஐ. தே. க. வின் படை சு. க. விற்குப் பிரச்சினையாக இருப்பதுண்டு. அந்தப் பிரச்சினையை, தமிழரின் பெயரைத்தான் வெட்டி ஆள சு. க. முயற்சிப்பது வழக்கம். இப்போது தமிழ் இளைஞர்களைப் பலிக்கடாவாக்கித்தான், எஸ். ரி எஃப். ஐப் பலவீனப்படுத்தும் நடவடிக்கை நிகழ்கின்றது.

ஐ. தே. க. வின் எஸ். ரி. எஃப். ற்குப் பதிலாக சு. க. யின் எஸ். ரி. எஃப். இதுதான், எஸ். ரி. எஃப். மீதான மேற்படி விசாரணையின் உள்நோக்கமும் சாராம்சமும்.

யாழ்ப்பாணப் பொது நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்

# தமிழரின் கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றம்!

நாகரிகம் வளர்ச்சியடையாதகாலத்திற்கு முன்னர்வாழ்ந்த எமது மக்கள், படிக்காத வர்க்கம் எனக் கருதுவது முற்றிலும் தவறானது.

அவர்களின் கல்விமுறையானது, தமது வாழ்க்கையுடன் இணைந்த கல்வியாகும். தமிழர்களின் கல்வி முறை ஆறாக வகுக்கப்பட்டிருந்தது. அதாவது 1. குருகுலக் கல்வி. இது குருவினுடைய வீட்டில் இருந்து படித்தல் ஆகும். 2. திண்ணைப்பள்ளிகள்:- இது வீட்டின் ஒரு புறத்தில் திண்ணை அமைத்து, அவ்வீட்டில் படித்தவர் ஏனையவருக்குக் கற்பித்தலாகும். இவ்வாறு திண்ணைகள் அமைந்துள்ள வீடுகளை இன்றும் கிராமப் புறங்களில் காணலாம். 3. மடாலயங்கள்:- இது ஆலயங்களின் ஒரு புறத்தில் பெரிய மடங்களை அமைத்து அங்கு கல்வி புகட்டுதல் ஆகும். 4. நிலாப் பள்ளிகள்:- இது நிலவு காலங்களில் வயோதிபருக்கும் வீரர்களுக்கும் போர்ப் பயிற்சிகள் பற்றிக் கற்பித்தலாகும். 5. சங்கங்கள்:- இது சங்கத்துப் புலவர்கள் சங்கங்கள் அமைத்துக் கல்வி பயின்றது. இது முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என வகுக்கப்பட்டிருந்தது. நல்லூரிலும் ஒருசங்கம் இருந்ததாகக் கூறப்படுகின்றது. 6. பட்டறைப்பள்ளிகள்:- இது உயர் கல்வி கற்பிக்கும் இடமாகும். இவ்வாறு, தமிழர் தமது வாழ்க்கைக்கு ஏற்றவாறு கல்வி பயின்றனர். இதனால் தமிழன் எல்லாக் கலைகளிலும் மிகவும் திறமையானவனாகக் காணப்பட்டான்.

ஆனால் காலப்போக்கில் ஏற்பட்ட அந்நியப் படையெடுப்புக் காரணமாக இந்த அமைப்பு மாறியது. அதாவது மேலைநாடுகளின் கல்வி முறை புகுத்தப்பட்டது. இன்று நாம் தெளிவாகக் காணக்கூடிய ஆங்கிலக்கல்வி கட்டாயமாகப் புகுத்தப்பட்டதன் காரணம், எமது மொழிப்பற்றை இல்லாமற் செய்வதற்கே. இதனால், தனிமனித முன்னேற்றம் ஏற்பட்டது. அதாவது அந்நியமாதல் ஏற்பட்டது. இவ்வாறு ஏற்பட்டதனால், கிராம வாழ்க்கை, மொழிப்பற்று என்பன இல்லாமற் போயின.

தொகுப்பு சி. யுகேந்திரன்
ஆண்டு - 12
மன் / அடம்பன் ம. ம. வி.
அடம்பன்

# ஜனனி அரிசி ஆலை

ஒழுக்கம் என்பது போர்க்களம் போன்றது. அதில் வாழ வேண்டுமெனில், ஓயாமல் நம் மனதோடு போராட வேண்டியிருக்கின்றது.

—ரூஸோ

நெல்குற்றல் — திட்டல் தரமான சேவை

# ஜனனி அரிசி ஆலை

சாமியன் அரசடிச் சந்தி
நெல்லியடி — கரவெட்டி

உங்கள் அழகிற்கு மேலும் அழகூட்ட, அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு.

## கிருத்திகா நகை அகம்

மருத்தித்துறைச்சாலை, மந்திகை
புலோலி,

ஓடர்கள், குறித்த நேரத்தில்
செய்து கொடுக்கப்படும்.

# வெற்றிமுறை ஆலோசகர் எம். ஆர். கோப்மேயர்



டொக்ரர் எம். ஆர். கோப்மேயர். இந்தப் பெயர் சாளரம் வாசகர்களுக்கு அறிமுகமான பெயர். இவர் எழுதிய கட்டுரைகள் சில, சாளரம் மாணவர் பக்கத்தில் மறுபிரசுரமாக வெளிவந்துள்ளது. இவரின் கட்டுரைகளைப் படித்துள்ள உங்களில் அநேகருக்கு இவரைப்பற்றித் தெரியாமல் இருக்கலாம். இவரை இன்று உங்களுக்கு அறிமுகம் செய்கின்றோம்.

எம். ஆர். கோப்மேயர் (M. R. Kopmeyer) அமெரிக்காவைச் சேர்ந்த எழுத்தாளர். அமெரிக்காவின் எட்டுக் கூட்டு நிறுவனங்களுக்குத் தலைவராகப் பணி புரிந்து, தற்போது ஓய்வுபெற்றுள்ளார்.

நூற்றியிரண்டு நிறுவனங்களுக்கு நிர்வாக ஆலோசகராக இருக்கின்றார். அமெரிக்காவின் உற்பத்திப் பெருக்கம் தொடர்பான வெள்ளை மாளிகைக் குழுவின் உறுப்பினராக உள்ளார். சர்வதேச அளவில் புத்தக வெளியீட்டாளர். வெற்றியின் வழிகளை அனைவரும் அறிந்துகொள்ள, மிகப் பிரசித்தமான நூல்களை எழுதியுள்ளார். 'வெற்றி நிறுவன'த்தின் (The Success Foundation) தலைவராகவும் இவர் பணிபுரிந்தார்.

கோப்மேயர், சிறுவயதில் அலுவலகம் ஒன்றில் எடுபிடி வேலை செய்யும் அலுவலகப் பையனாக இருந்தவர்.

தோமஸ் அல்வா எடிசனின் புகழ்பெற்ற வெற்றி வழிகளைப் படித்து, அதன் மூலம் கவரப்பட்டார். ''தோல்விகளில் இருந்து வெற்றிகளைத் தேடிக் கொண்டவர் அல்வா எடிசன்'' என்கிறார் இவர். பழங்கால ஜப்பானியத் தத்துவம் ஒன்றை அல்வா எடிசன் பயன்படுத்தினார். ''நீ கீழே விழுந்து எழும்போது, வெறுங் கையுடன் எழாதே'' என்பதே அந்தத் தத்துவம். இந்தத் தத்துவம் கோப்மேயரையும் பெரிதுங் கவர்ந்தது.

நீண்ட தொடர்ச்சியான தோல்விகளுக்குப் பிறகு, எடிசன் உற்சாகத்தோடு இப்படிக் கூறினாராம்:- ''சரிப்பட்டு வராத ஆயிரம் விடயங்களை நாம் இப்போது தெரிந்து கொண்டிருக்கிறோம். அதனால், எது சரிப்பட்டு வரும் என்பதை நெருங்கி விட்டோம்'' எடிசன் இப்படித்தான் வெற்றியை நெருங்கினார் என்கிறார் கோப்மேயர்.

இதன் மூலம், வெற்றி பெறுவதற்கான வழிகளைப்பற்றி ஆராய கோப்மேயர் முற்பட்டார். பல நூல்களிலிருந்தும், பல வெற்றியாளர்களின் அனுபவங்களிலிருந்தும் பல விடயங்களைக் குறித்து வைத்து, அவற்றை முழுமையாக வெளிப்படுத்துவதற்குத் தனக்கு ஐம்பது ஆண்டுகள் தேவைப்பட்டதாக இவர் கூறுகின்றார். ஆகவே, இது இவரது மிகப் பெரியதொரு முயற்சியாகும். இவற்றை இனி, எளிமையாக மக்களுக்கு விளக்கி, அவர்களுக்கு வழிகாட்டுவதே தமது பணி என்கிறார் கோப்மேயர்.

சிறுவனாக இருந்தபோது கோப்மேயர் சரியாகக் கதைக்கமாட்டார். திக்கித்திக்கித்தான் பேசுவார். காலவோட்டத்தில் இதற்கான சிகிச்சையை இவரே கண்டு பிடித்தார்; சரளமாகப் பேசவும் கற்றுக்கொண்டார். இன்று உலகத் தரப் பேச்சாளர் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளார்.

தற்போது, இவர் வெற்றிக்கான வழிகள் அடங்கிய நானகு நூல்களை எழுதியுள்ளார். இதற்கு மட்டுமே பத்து ஆண்டுகள் பிடித்ததாம்.

இவரது இந்த நூல்கள் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

1. செல்வந்தர் ஆவது எப்படி?
2. இதோ உதவி!
3. நீங்கள் விரும்புவது எதுவானாலும் அதை அடைவது எப்படி?
4. எண்ணங்களை மேம்படுத்துங்கள்!

ஆகிய நூல்களே இவை. தமிழ் நாட்டிலுள்ள 'கண்ணதாசன் பதிப்பகம்' இந்நூல்களை எளிமையான முறையில் தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளது.

— சசி

# எண்ணத்தின் விளைவு

உடலையும் உடைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பும் மனிதன், தன் உள்ளத்தைச் சுத்தப்படுத்த மறந்து விடுகின்றான். இதனால் அவன் வாழ்வில் மேம்பட, முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றான். உள்ளச்சுத்தம் என்பது தூய எண்ணத்தையே குறிக்கும். இந்த எண்ணம் வளர்ந்தால், நாளடைவில் குணமாக மாறி, செயல் என்ற விளைவுக்கு வருகின்றது.

உயர்வாழ்வும், பெருந்தன்மையான தெய்வீகப் பண்பும் எமக்குக் கொடுக்கப்பட்ட வரங்கள் அல்ல; நேர்த்தியான எண்ணம் தந்த விளைவுகளே! சரியான, நேர்த்தியான எண்ணங்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் உயர்வான நிலையையும், தீய எண்ணங்களைத் வளர்ப்பதன் மூலம் இழிவான நிலையையும் பெறுகின்றோம்.

மனிதன் சக்தியையும் அறிவையும் பயன்படுத்துவதனால், சூழ்நிலையை உருவாக்கி, தான் விரும்பிய நிலையை உருவாக்கிக்கொள்ளலாம். சூழ்நிலையால் மனிதன் மாறுகின்றான் என்பது இல்லை. மனிதனே சூழ்நிலைக்காக மாறுகின்றான். ஏனெனில் எண்ணவோட்டத்திற்கு ஏற்ப, சூழ்நிலை அமையப்பெறும். மாறாக, சூழ்நிலையைக் குறை கூறுவதன் மூலம், வாழ்வின் உச்ச நிலையை அடைய முடியாது. எமது எண்ணவோட்டத்தின் மூலமாக எமக்கான சூழ்நிலையை உருவாக்கிவிடுவோம் ஆயின், வாழ்வில் வெற்றிப் பாதையில் பயணிப்போம்.

எமது எண்ணங்களின் மாற்றத்திற்கேற்ப, எமக்கமையும் சூழ்நிலையும் மாற்றம்பெறும். மனம் என்னும் எண்ணங்கள் யாவும் இரகசியமாக உள்ளடக்கலாம் என்றால், அது முடியாத காரியமாகி, விடும். ஏனெனில், சீரிய எண்ணங்கள் அன்றி, மனதில் தீய எண்ணங்கள் ஏற்படும் ஆயின், அதற்கேற்ப, அது செயற்பாடாக மாறுகின்றது. இதுவே எமக்கான சூழ்நிலையாகின்றது. இதனால், சீரிய எண்ணங்கள் நல்லவற்றையும் தீய எண்ணங்கள் தீயவற்றையும் எண்ணத்தின் விளைவாக ஏற்படுத்துகின்றது.

நாங்கள் அனைவரும் மகா தவறைச் செய்தவண்ணம் இருக்கின்றோம். அது என்னவெனில், எமது சூழ்நிலையை எமக்குச் சாதகமாக்க முற்படுகின்றோம். தவிர, எமது எண்ணங்களை மேம்படுத்த

இளை நூலகம்
மா நகர ச..
யாழ்ப்பாணம்..

முனைவதில்லை. இதனால், சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த முடிதில்லை. உடலின் வெளித்தோற்றத்தின் மையப்பாட்டில் நபரை எடைபோடும் வழமை உள்ளது; அது தவறாகும்; அன்றி, நபரின் எண்ணப்பாட்டில் அவர் என்னவாக இருக்கின்றார் என்பதை வைத்தே எடைபோடல் வேண்டும். ஏனெனில், கைதியாக நிற்கும் ஒருவன் அந்நீதிமன்றத்தில் நீதிபதியை விட, சில உயரிய குணங்களைக் கொண்டிருக்கலாம். ஆகவே, எண்ணத்தின் மொத்த வடிவமாக உயரிய மனிதன் உருவாகின்றான்.

துன்பச் சூழல்கள் ஏற்படுகின்றன என்றால், அதற்கு விதியல்ல காரணம். மன எண்ணத்திற்கு ஏற்ப வாழ்வில் ஒத்திசைவின்மையே காரணம். இவ் ஒத்திசைவின்மை, தவறான எண்ணப்பாட்டில் உருப் பெற்றனவாகும். சீரிய எண்ணந்தான், எமக்கான நோயற்ற வாழ்வைக்கூடத் தருகின்றது.

தாழ்ந்த எண்ணங்கள், குழப்பம், தளர்ச்சி உடைய எண்ணம், பயம், சந்தேகம், பலவீனமான கோபத்தனமான பிறரைப் பழி சொல்லும் எண்ணங்கள், சுயநலஎண்ணம் என்பன எமக்குத் துயரமான விளைவையும்; தூய்மையான எண்ணம், துணிவுமிக்க முடிவெடுக்கும் எண்ணம், சாந்தமான, சுயநலமற்ற, பிறரை அநுசரிக்கும் எண்ணம் என்பன எமக்கு நிறைவான வாழ்வையும் அளிக்கின்றன. ஆகவே, எமது எண்ணங்களைத் தேர்வுபடுத்துவதன் மூலம் எமது விருப்புச் சூழ்நிலையை உருவாக்கி, காலத்தை வெல்லும் வல்லமையை வளர்ப்போம்.

தொகுப்பு – தி. றஜீவன்
யாழ்ப்பாணம்.

---

☐ *பிரிட்டிஷ் பிரதமராக இருந்த லொயிட் ஜோர்ஜ் ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தார்.*

*'உங்கள் தாத்தா கழுதை வண்டி ஒட்டியவர் என்பது உமக்குத் தெரியுமா?' என்று கேட்டான் கூட்டத்திலிருந்த ஒருவன்.*
*'என் தாத்தாவின் வண்டி போன இடம் எனக்குத் தெரியாது ஆனால், கழுதை உயிரோடிருப்பதை இங்கே கண்டுபிடித்துவிட்டேன்' என்றார் ஜோர்ஜ் அமைதியாக.*

மா நகர சபை
யாழ்ப்பாணம்


# குமர நந்தினி வைத்தியசாலை

நோயாளிகளுக்கான மருத்துவச் சிகிச்சையும், ஆலோசனைகளும் சிறந்த முறையில் வழங்கப்படும்.

நோய்வரும்போது ஞாபகம் வரவேண்டிய வைத்தியசாலை—

## குமர நந்தினி வைத்திய சாலை

இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

# இலமுற்றம்

## முகங்களும் மனங்களும்

'முகங்கள்' திரைப்படம் பார்த்திருப்பீர்கள். ஞானரதன் இயக்கி வெளியான இப்படம், யாழ்ப்பாணத் திரையரங்குகளில் காண்பிக்கப்பட்டது.

அந்தப்படத்தின் முடிவு – இடம்பெயர்ந்து துன்பமுற்ற நாயகனும் நாயகியும் யாழ்ப்பாணத்தை விட்டு வன்னிக்குச் செல்வதாக அமைக்கப்பட்டுள்ளது.

வளம் நிறைந்த வன்னிமண், இடம்பெயர்ந்தோரின் வாழ்விற்குக் கைகொடுக்கும் என்கிற செய்தி படத்தில் சற்று அழுத்தமாகச் சொல்லப்பட்டிருந்தது.

இப்படத்தைப் பார்த்துவிட்டு வந்த நண்பர் ஒருவர் என்னிடம் சொன்னார் இப்படி –

"அதெப்படி எங்கட மண்ணைவிட்டிட்டு வன்னிக்குப்போங்கோ எண்டு சொல்றது? இந்தக் கட்டம் எனக்குப் பிடிக்கேல்லை"

–அவர் ''எங்கட மண்'' என்று குறிப்பிட்டது, யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொருவரினதும் சொந்த ஊரையே.

அப்படியென்றால், வன்னி எங்களது மண்ணில்லையா?

மட்டக்களப்பில் பிறந்த ஒரு போராளி யாழ்ப்பாணத்தில் இராணுவத்தோடு போரிட்டுச் சாகின்றான். யாழ்ப்பாணத்தில் பிறந்த போராளி திருகோணமலையை மீட்கப் போராடிச் சாகின்றான். வன்னியில் பிறந்தவன் வடமராட்சியில் மடிகின்றான். அந்த நண்பர் கூறிய கருத்தின்படி பார்த்தால், அவர்கள் எல்லோரும் அவரவர் ஊர்களில் அல்லவா போராடியிருக்க வேண்டும்?

எனக்குப் பல கேள்விகள் மனதில் வந்து உறுத்தின.

போர்க்காலக் கருத்தரங்கொன்றில் பெண் போராளியொருவர் உரையாற்றுகையில் சொன்ன விடயமொன்றும் சட்டென்று நினைவிற்கு வந்தது.

''இன்றைக்கு யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிக்க வரும் சிங்களப் படையைத் தடுத்து நிறுத்தவே, யாழ்ப்பாண இளைஞர்கள் போதாது, பெரிய ஒரு போர் நடக்கும்போது எல்லோரும் தங்கள் தங்கள் பிரதேசங்களைக் காப்பாற்றச் செல்லுமாறு போராளிகளுக்கு இயக்கம் பணிக்குமானால், யாழ்ப்பாணத்தை யார் காப்பாற்றுவது? இப்படி நடக்காது, எனினும் ஒரு கதைக்கு இதனைச் சொல்கின்றேன்''

– இப்போராளியின் **இக்கேள்வி** சிந்திக்க வைக்கின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் **தான்** பிறந்த **ஊர்**, கிராமம், வீடு, அந்த வீதிகள் எல்லாம் அற்புத மானவையாகவே, தோன்றலாம். இதில் தவறு இல்லை. ஆனாலும், அப்பற்று இன்றைய கால கட்டத்தில் பரந்து **விரிந்த** தன்மை கொண்டதாக இருத்தல் அவசியமானது.

ஊக்காகப் போர்க்குணம் கொள்ளும் நாம் வீடே உடைந்து போன பின்- ஊரே அழிந்துபோன பின் – போர்க்குணம் கொள்ள வேண்டாமா?

அது ஒருபுறமிருக்க- ஆயிரம் மைல்களுக்கப் பால் இருக்கும் அந்நிய மண்ணில் பொருளாதாரத் தேவைக்காக எந்தவொரு தொழிலைக் கூட மேற்கொள்ளும் நாம் – இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழப்பழகிக் கொண்ட நாம் – எமது சொந்த மண்ணிலேயே இடம்பெயர்ந்து தொழில் செய்து வாழ்வதைக் குறைவாகக் கருதக் கூடாது.

முன்பெல்லாம் அரசாங்க – வங்கி உத்தியோ கத்தர்கள் கூட, வன்னிப் பிரதேசங்களுக்கு மாற் றம் பெற விரும்புவர். அங்கே விவசாயம் செய்து மேலதிக வருமானம் பெறலாம் என்பதால் அப் பிரதேசங்களை அவர்கள் விரும்பினர்.

**விவேக்**

அடுத்த வீட்டுக்காரன் ஒரு 'பூவரசம் கதியா லை, ஓர் அங்குலம் நகர்த்தி நட்டு விட்டாலே சண் டைக்கு நிற்கும் நாம், ஊரே பறிபோகிறபோது, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிவிடுகின் றோம். அந்தக் கட்டத்தில் ஒன்றும் செய்யமுடி யாவிட்டாலும், அடுத்த கட்டத்தைப் பற்றிக் கூட நாம் சிந்திப்பதில்லை. **'பூவரசம் கதியா'**

வன்னிமண்ணில் உழைத்த பணமெல்லாம் அந்த மண்ணின் வளர்ச்சிக்குப் பயன்படாமல், தங்களது 'சொந்த ஊர்'களில் கல்வீடாகவும் கட்டடங்களாகவும் தோற்றம் பெற்றமை வேறு கதை!

இன்றைய போர்க்காலச் சூழலில் யாழ்க் குடாநாட்டில் அகதிகளாக்கப்பட்ட பலர் வன்னி

மண்ணிற்கு இடம் பெயர்ந்து, சிறிது சிறிதாக விவசாயம் செய்யத் தொடங்கி, பின் சொந்தமாகக் காணிகளைக் கூட வாங்கிக் குடியேறியுள்ளமை கவனிக்கத்தக்கதோர் மாற்றமாகும்.

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கூட, இடம் பெயர்வோருக்கு இதனையே ஆலோசனையாகக் கூறுகின்றது. அதற்கான உதவிகளையும் செய்து கொடுக்கின்றது.

பரந்த பரிமாணம் மிக்க இன்றைய விடுதலைப் போராட்டச் சூழலில், தமிழ் மக்கள் தங்கள் மனங்களில் படிந்து போயிருக்கும் பழைய தூசுகளைத் தட்டி துப்புரவாக்க வேண்டும்.

பிரதேசம் – பிரதேசத்திற்குள் ஊர் – ஊருக்குள் கிழக்கு மேற்கு - அதற்குள் பகுதிகள் – எனக் கூறுபோட்டு பிரிந்து நிற்கும் மனோபாவம் முற்றாக உடைபடல்வேண்டும்

## முட்டாள்களைச் சந்திப்பது முதல்தடவையல்ல

*விவேகானந்தர் அதிகம் பிரபலமடையாமல் இருந்தபோது, ஒரு நாள் தென்னிந்தியாவில் புகையிரதத்தில் பயணம் செய்த வெள்ளைக்கார இராணுவ வீரர்கள் இவரை நோட்டமிட்டவாறே துறவிகளைப்பற்றிக் கேவலமாகப்பேசிக் கொண்டிருந்தனர்.*

*சேலம் புகையிரத நிலையத்தில் வைத்து, அதிகாரியிடம் விவேகானந்தர் ஆங்கிலத்தில் பேசுவதைக்கண்ட அந்த வெள்ளை இராணுவ வீரர்கள் வியப்படைந்தனர்.*

*புகையிரதம் புறப்பட்டதும், ''உங்களுக்குத்தான் நன்றாக ஆங்கிலம் தெரிகிறதே. நாங்கள் பேசிக் கொண்டவற்றிற்கு ஏதும் மறுப்புத் தெரிவித்திருக்கலாமே'' என்று கேட்டனர்.*

*அதற்கு விவேகானந்தர் இவ்வாறு கூறினார்:–*

*''முட்டாள்களை நான் சந்திப்பது, இது முதல் தடவையல்ல''*

# ○ விளையாட்டுச் செய்திகள் ○

☐ வட தமிழ்ப் பாடசாலைக ளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இவ்வருட நவம்பர் முதல் வாரத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற உள்ளது. வவு னியா, கிளிநொச்சி, முல் லைத்தீவு, மன்னார் மாவட் டங்களிலிருந்து முதல் இடத் தைப் பெறும் 17, 19, வய துப்பிரிவுப் பாடசாலை அணி கள் இறுதிப் போட்டியில் பங்குபற்றுகின்றன. இதற் கான . ரம்ப ஏற்பாடுகளில் வட தமிழீழப் பாடசாலை கள் விளையாட்டு அபிவிருத் திக்குழு ஈடுபட்டுள்ளது. விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்க ளுக்கு மேலும் ஒரு சந்தர்ப் பம்.

☐ உதைபந்தாட்ட உலகத்தில் முன்பு பிறேசில் வீரன் பெலே –அதன் பின்பு, ஆர்ஜன்ரீனா வீரன் மறடோனா– இன்று மீண்டும் பிறேசிலின் நம் பிக்கை நட்சத்திரம் றொபேட்டோ பகியோ! பகியோவின் தாளத்திற்கு ஆடுகின்றது உதைபந்தாட்ட உலகம். பலகோடி ரூபாய் களை ஒரு வருடத்தில் தனது ஊதியமாக, உதைபந்தாட் டம் ஆடுவதற்காக வாங்கும் அற்புத மனிதன் பகியோ,

☐ விளையாட்டுக்களில், சதுரங் கம் தற்போது அதிகமான வர்களைக் கவர்ந்து வருகின் றது. இதனது பூர்வீகம்– ஆரம்பம் இந்தியா. சர்வ தேச முதன்மை ஆட்டக் காரர்களாக, சதுரங்கச் சக் கரவர்த்திகளாக ரஷ்யர்கள் இருந்து வந்தார்கள். ஆனால், இந்தியாவிலிருந்து பல இளை ஞர்கள் தற்போது சர்வதேச மட்டத்தில் முதலிடத்துக்குப் போட்டி போடுகின்றார்கள். இவ்வாட்டத்தில் பல விஸ்வ நாத் ஆனந்துகள் வளர்கின் றார்கள். இவ் ஆட்டத்திற்கு அதிகளவு பொறுமை தேவை.

☐ கொல்வ் (Golf) ஆட்டம் பணக்காரர்களது விளை யாட்டு. இளைஞர்களிலும் பார்க்க, வயதானவர்கள்தான் அதிகம் இதில் ஈடுபடுவார்கள் விளையாடும் மைதானம், உபகரணங்கள் தேவையைப் பணக்காரர்களால்தான் ஈடு செய்ய முடியும். எமது பிரதேசத்தில் இவ் விளை யாட்டை அறிமுகப் படுத்து வதைச் சிந்திக்கவே முடியாது.

☐ பிலியாட்ஸ் (Billiards) என்பது ஒருசிறந்த விளையாட்டு. கோலொன்றால், குண்டுகளை மூலையிலுள்ள பைகளுக்குள் தள்ளுவதே, ஓர் அற்புதமான கலை.

றெக்ஸ் வில்லியம்ஸ், தொடர்ந்து 14 வருடங்களாக முதலாம் இடத்தை சர்வதேச மட்டத்தில் பெற்று வருகின்றார். இவருக்கு வயது தற்போது 61. இவ்விளையாட்டில் இளைஞர்களே இவருக்கு ஈடு கொடுக்க முடியாதுள்ளார்கள்.

☐ ரெனிஸ் (Tennes) ஆட்டத்தில் உச்சம், விம்பிள்டன் ஆடுகளத்தில் நடக்கும் ஓர் அற்புதம். இங்கு நடந்த ஒரு சம்பவம்:–

ஆட்டத்தில் தோற்ற ஜெவ்ரறங்கோவுக்கு 15, 500 டொலர்கள் குற்றப்பணமாக அறவிடப்பட்டது. தண்டனைக்கான காரணம் ஆட்டத்தின் நடுவரது கையை முறுக்கி, கன்னத்திலடித்தது. அடித்தவர் யார் தெரியுமா? திருமதி. ஜெவ்ரறங்கோ! மனைவி செய்த குற்றத்திற்கு கணவனுக்குத் தண்டனை. பாவம் ரறங்கோ.

☐ முதன்முதல் ஒலிம்பிக் தீபம் ஏற்றி நடத்தப்பட்ட தடகள ஆட்டம், 1936 ஆம் ஆண்டு பேர்லின் நகரத்தில் இடம் பெற்றது.

☐ ஒலிம்பிக் போட்டியில் குண்டு எறிதல், ஈட்டி எறிதல், தட்டெறிதல், சம்மட்டி வீசுதல் என்பன, ஆண்களுக்கான எறிதல் நிகழ்ச்சிகள். இதில் சம்மட்டி வீசுதல் பெண்களுக்கு நடத்தப்படுவதில்லை.

☐ வோட்டர் போலோ (Wate Polo) தண்ணீரினுள் பந்தாட்டம். இவ்வாட்டம் மிகவும் கடினமானது. 20 நிமிடங்கள் ஆடப்படும். 5 நிமிடங்கள் கொண்ட, 2நிமிடங்கள் வீதம் இடைவேளை விடப்பட்டு, 4 பிரிவுகளாக நடக்கும் இவ்வாட்டத்திலே தண்ணீரினுள் வீரர், வீராங்கனைகளின் திறமைகளைப் பார்க்கலாம்.

☐ 4 வருடங்கள் சிறையில் வாடிய குத்துச்சண்டை வீரன் ரைசன், வெளியில் வந்து முதலில் பங்குபெற்ற சண்டையில் (குத்துச்சண்டை) எதிரியான பீற்றர் மக்னீலியை 86 செக்கனில் நொக் அவுட் ஆக்கினார். ரைசனின் திறமை எதிர்வரும் போட்டியில்தான் முழுமையாகத் தெரியும்.

# உறவுகள்

நெடுந்தீவு மன்ரேசா

மயக்க நிலையில் இருந்த இராஜியை, இடையில் கேட்ட முனகல்கள் கதறல்கள் – அவல ஓலங்கள் – சனக் கூட்டத்தின் அல்லோல கல்லோல நடமாட்டம் என்பன தட்டி எழுப்பின.

கண்களை அரையும் குறையுமாகத் திறக்க முற்பட்ட அவள் சற்று அதிர்ந்தே போனாள்.

எங்கே இருக்கின்றேன்? யார் இவர்கள் எல்லாம்? காயங்கள் கட்டப்பட்ட நிலையிலும், இரத்த வெள்ளத்திலும், ஆடைகள் கிழிந்தும் கறைபடிந்தும், குருதி தோய்ந்தும்...... தொடர்ந்தும் அவளால் சிந்திக்க முடியவில்லை. என்ன நடந்திருக்கும்? தனக்குள்ளே வினவிய அவளுக்குத் தலையில் வலி ஏற்படவே, தன் தலையிலும் காயம் என்பதனை உணர்ந்து கொண்டாள். எழுந்திருக்க முற்பட்டும் முடியாதவளாக, பார்வையை ஓட விட்டாள். பலர், உயிரற்ற பிணங்களாகவும், ஊனமுற்ற சிதைந்த நிலையிலும் கொண்டுவரப்படுவதைக் கண்டாள். பணிபுரியும் மருத்துவர்கள், ஊழியர்கள் அவசர அவசரமாகச் சிகிச்சை அளிப்பதையும், அடுக்கடுக்காகக் கொண்டு வரப்படும் காயமடைந்தவர்களுக்கு அங்கு நின்றவர்கள் உதவியளிப்பதையும் அவதானித்தாள். அக்கணத்தின் நிலையினை அவளால் ஊகிக்க முடியவில்லை. ''சண்டைக்கெண்டா வந்தவன்? சனங்களையெல்லோ அழிக்க வந்தான்'' ஆத்திரக் குரலில் வயதானவர் ஒருவர் குமுறுவது கேட்டது. ''படுபாவி சனத்தைப் பார்த்தல்லோ போடுகிறான். தஞ்சம் தேடி ஓடிப்போயிருந்த கோயிலுக்கெல்லோ போட்டுவிட்டான்'' அவர் கூறி முடிக்குமுன், இன்னொருவர் குரல் தொடர்ந்தது.



இராஜியால் ஓர் அளவிற்கு நிலைமையினை உணர முடிந்தது. நடந்த சம்பவங்கள் மெல்ல மெல்ல நினைவிற்கு வரத் தொடங்கின. அந்நேரமே அவளது நினைவுகள் அவள் அன்னையையும்சகோதரர்களையும் சுற்றி வட்டமிட்டது. ''நாங்களும் அந்தக் கோயிலுக்குள் தானே இருந்தோம்'' அவள் உதடுகள் மீண்டும், மீண்டும் உச்சரித்து ஓய்ந்தன. அவளால் எழுந்திருக்கக்கூட முடியவில்லை. படுக்கையில் நினைவுகளை மீட்டுக் கொண்டாள்.

அப்போழுதுதான் அவள் கண்ணயர்ந்திருப்பாள். ''பிள்ளை! ஏதோ குண்டுச் சத்தம் கேட்கிறதுபோல் இருக்கு; எழும்பு'' இராஜியைத் தாய் தட்டி எழுப்பினாள். குண்டுச் சத்தம் அவர்களுக்குப் புதிதல்ல. நித்தம் கேட்பதும், பழகிப்போனதும் தான். இரவு பகல் பாராமல் உழைத்துக் களைத்த இராஜிக்கு எழுந்திருக்கமுடியவில்லை. இராஜி தனது சிறு வயதில் தந்தையை இதே குண்டில்தான் இழந்தாள். இதனால் தானோ என்னவோ, அவள் அன்னைக்குக் குண்டுச் சத்தம் என்றாலே ஒரு பயம். குடும்பத்தில் மூத்தவளான இராஜி, குடும்பப் பாரத்தைத் தன் தலையில் சுமந்து கொண்டாள். உயர்தரப் பரீட்சை சித்எய்தியவுடன், தனியார் நிறுவனம் ஒன்றில் கடமையாற்றினாள். கிடைக்கும் ஊதியம் அவளுடன் ஆறாக இருக்கும் குடும்ப உறுப்பினர்களின் தேவையை எப்படி நிறைவுசெய்ய முடியும்? தன் உடல் வருத்தத்தினைப் பாராமல் தையல் வேலையும்செய்து' மேலதிகமாகச் சிறுதொகையினைச் சம்பாதித்து வந்தாள். வழமைபோல் அன்றும் அவள் வேலை முடித்து வீடு திரும்ப, மாலை ஆறுமணி ஆகிவிட்டது. பின், தையல்வேலை செய்துவிட்டு படுக்கைக்குச் செல்லும்போது, நேரம் ஒருமணியைத் தாண்டிவிட்டது. உழைத்துக்களைத்து உறங்கிப்போன இராஜியின் உறக்கத்தை, இத்தனை பெரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறிய குண்டினாற்கூட கலைக்க முடியவில்லையே. நித்திரைத் தூக்கத்தில் எழுந்திருக்க முடியாதவளாக, ''அம்மா அது எங்கோ தூரத்தில் !கேட்கிறது படுங்கோ' சொல்லி முடிக்குமுன், பாரிய இரைச்சலுடன் பக்கத்து வீட்டில் வீழ்ந்து வெடித்தது இன்னொன்று. இராஜி நிலை குலைந்துபோனாள். எங்கே ஓடுவது? அம்மா, சகோதரர்களை எப்படிக் காப்பது? இனி விழப்போவது எமது வீட்டில் தானா? சிந்தனை வலையில் சிக்கியவளை, ''பிள்ளை! அடுத்தது வருமுன் போய்விடுவோம்' என்றாள் அம்மா. பயத்துட

மா நகர சபை

னும், நடுக்கத்துடனும் மேலே சிந்திக்க முடியாதவளாக, உயிர்கள் மட்டும் மிஞ்சினால் போதும் என்ற முடிவுடன் வீட்டைவிட்டு வெறுங்கையுடன் இரவோடு இரவாகப் புறப்பட்டனர். புறப்படும் போதுதான், ஊரே அல்லோல கல்லோலப்படுவது தெரிந்தது. குழந்தைகளின் கதறல்கள் ஒரு புறம்; வயதானவர்களின் முனகல்கள் மறுபுறம்; பிள்ளைகளைப் பிரியாமல் இடையிடையே அவர்களின் பெயர்களைச் சொல்லி அழைப்போர் இன்னொருபுறம். பெருமூச்சுடனும் பயப் பீதியுடனும் ஓட்டமும் நடையுமாகச் செல்லும் மக்கள் வெள்ளத்துடன் இராஜியின் குடும்பமும் சேர்ந்து கொண்டது. வரும்போது, வழியில் இடையிடையே வெடிக்கும் ஷெல்லிடமிருந்து தப்புவதற்காகத் தரையில் வீழ்ந்து படுப்பதும், தலைக்கு மேலாகப் பறக்கும் விமான அரக்கனிடமிருந்து தப்புதற்காக ஓடி ஒளிப்பதுமென அவலப்பட்டனர். வெடிக்கும் ஷெல்லும் வீழும்குண்டும் எத்தனைமக்களின் உயிர்களை உறிஞ்சி வெறும் பிணங்களாக்கின. யார், யாரைக் காப்பது? உறவுகளானாலும், இந்த நேரத்தில் பிணங்களைக் கூடத் தூக்கவில்லையே; தூக்கவும் முடியவில்லையே. பிரிந்த மனங்கள், மனச்சுமையினை ஓவென அலறி, கண்ணீராய் ஓடவிட்டு நடந்து கடந்தன. காயமடைந்தவர்களைக் காப்பதற்கும், கண்ணுக்கெட்டியவற்றைத் தூக்குவதற்கும் சென்ற வாகனங்களின் விரைவு. இராஜியின் மனதில் ஒரு வைராக்கியத்தையும் ஆறாத்துயரினையும் தூண்டிவிட்டது.

இராஜியின் குடும்பத்துடன் நடந்து வந்தவர்களில் சிலர் வழியில் இருந்த கோயில் ஒன்றினுள் தங்கினர். இரவோடு இரவாக நடந்த களைப்புடனும், எங்காவது தங்கி நிற்கலாம் என்ற ஏக்கத்துடனும் வந்த இராஜிக்கும் அவள் குடும்பத்தினருக்கும், துணைக்குக் கிடைத்தவர்கள் போல் அவர்கள் தெரிந்தது. ''பிள்ளை நாங்களும் இந்தக் கோயிலுக்குள் கொஞ்ச நேரம் ஆறிப் போவோம்'' தாயின் வார்த்தைகளை இராஜியால் தட்ட முடியவில்லை. நடந்து வந்த களைப்பினாலும் பய உணர்வினாலும், அவளது அன்னையும் சகோதரர்களும் நன்றாகக் களைத்துப்போய்விட்டார்கள் என்பதை அவளால் உணர முடிந்தது. கோயிலுக்குள் சென்றவர்கள், நிம்மதிப் பெருமூச்சுடன் ஓரமாக உட்கார்ந்தனர். கோயிலில் இருந்தாலும், இராஜியின் எண்ணங்கள் சிறகடித்துப் பறந்தன. எத்தனை கஷ்டங்களை மக்கள் அனுபவிக்கின்றார்கள்? தமிழராகப் பிறந்த ஒன்றிற்காகவா இவை? பிறந்த மண்ணையும் பறிகொடுத்த பின், மீண்டும் மீண்டும் ஓட்டமா? அந்நியரின் ஆக்கிரமிப்புப் போர் எமது மண்ணைப் பிடிக்கவா? முடியாது. ஆக்கிரமிக்கவே விடக்

கூடாது. எமது உயிர்கள் உடைமைகளைப் பறிகொடுத்த பின்னும் அடிமைகளாக வாழ்வதா? செத்து மடிந்தாலும், எமது மண்ணைக் காக்கவேண்டும். சிந்தும் குருதியால் எமது மண் உரம் பெறவேண்டும். அந்நியரை எம் மண்ணிலிருந்து அடித்து விலக்க வேண்டும். அநியாயமாக உயிர்களைக் கொல்லும் அரக்கரைக் கொன்றொழிக்க வேண்டும். குமுறும் அவளின் மனதில், கொந்தளிக்கும் அலைகள் அடித்து ஓயுமுன், ''என்ன கோயிலைச்சுற்றிப் பறக்கிறான் போலிருக்கு'' உடன்இருந்தவர்கள் முணுமுணுத்துப் பரபரப்படைந்தனர். ஆனால் இராஜி ''கோயில்'' என்ற மன அமைதியில் இருந்தாள். அங்கு இருந்தவர்கள் அங்கும் இங்கும் அங்கலாய்த்தனர். ''ஐயோ! ஆண்டவனே! ஆண்டவனே!'' என்ற குரல்கள் மேல் நோக்கி எழுந்தன. அவ்வளவுதான், அவள் நினைவுக்கு எட்டியது. என்ன நடந்திருக்கும்? அவன்.... குண்டு... போட்டானா? உலகமே கண்முன் சுற்றியது. என்ன நடந்திருக்குமென அறியத் துடித்தாள்.

நாட்கள் மூன்றாக நகர்ந்தன. வைத்தியசாலையில் முன்பின் அறியாதவர்கள் அவளை பராமரிப்பதனையும், அன்போடு ஆறுதல் கூறி அவளுக்குப் பணிபுரிவதையும் கண்டு உள்ளூர வியந்து கொண்டாள். ஆனால் அம்மாவும் சகோதரர்களும் ஏன் இன்னும் தன்னைப் பார்க்க வரவில்லை? வினாடிகள் நகர்ந்திருக்கும். அவளது அயல் வீட்டில் உள்ளவர் அவளது கட்டிலின் அருகில் நிற்பதையும், கண்களில் அனுதாபமும் கவலையும் குடிகொண்டிருந்ததையும் அவளால் கண்டுகொள்ளமுடிந்தது. இருந்தும், அவர் ஏதோ சொல்ல வந்தும் சொல்ல முடியாமல், கண்களிலிருந்து கண்ணீர் ஓடியது. ''இராஜி! அம்மாவும் தங்கைமாரும் போய்விட்டார்கள்'' அவர் சொல்லி முடிக்க முடியாமல் பதற்றப்பட்டார். நிலைகுலைந்த இராஜியின் கண்கள் நீர் சொரிய ஆரம்பித்தன. விம்மி விம்மி அழுதாள். வேதனையில் துடித்தாள், தனிமரமாகத் தவித்தாள். ''நான் என்ன தவறு செய்தேன்? இறுதியாகக் கூட, உங்களைப் பார்க்க முடியவில்லையே. எல்லோருமே என்னைத் தனியாக தவிக்க விட்டுவிட்டீர்களே. என்ன பாவம் செய்தேன்'' ஓவென அழுதாள்.

''கொடிய அரக்கன், உங்களைத் தேடியா வந்தான்? தஞ்சம் அடைந்த உங்களின் உயிரையா பறிக்க வந்தான்?'' ஆவேசம் கொண்டவளாகக் கண்ணீர் வடித்த அவளது கண்கள் கனலைக் கக்கின. வடிந்த கண்ணீரை துடைத்தவள், மனதில் உறுதியுடன் கட்டிலில் இருந்து எழ முயன்றாள். விழுப்புண் ஏந்தியபடி பக்கத்துக் கட்டில்களில் சில போராளிகள் அமர்ந்திருந்தனர். அவர்கள் முகங்களில் தெரிந்த தீட்சண்யம் அவளுக்கு நம்பிக்கையூட்டியது.

# அமெரிக்காவின் பொருளாதாரத் தடையும் அசைந்து கொடுக்காத கியூபாவும்

ஓர் இனத்தை ஆக்கிரமிக்க ஒடுக்க- அழித்தொழிக்க- எண்ணும் பேரினவாத எதிரீயான வன், அதற்காகப் பல்வேறு உபாயங்களைக் கைக்கொள் வான்.

இராணுவ ரீதியாக ஒடுக்க முடியாதபடி, உறுதியோடு எதிர்த்துப் போராடும் இனத்தையோ - வர்க் கத்தையோ வேறுவகையில் ஒடுக்க, பொருளாதாரத் தடை போன்றவற்றை எதிரியானவன் அந்த மக்கள்மீது முடுக்கிவிடு வான்.

இதன் மூலம், அந்த மக்கள் பட்டினியால் மடிவர். நோய் நொடிகளால், மருத்துவச் சிகிச்சை யின்றி மாண்டுபோவர். அதே வேளை, இவற்றினால், தமது நாட்டுப் புரட்சியாளர்கள் மீது அவர்கள் வெறுப்புக் கொள்வர்; அந்நியப்படுவர். யுத்தத்தினால் வெல்ல முடியாதவரை, இந்த உபாயங்களால் வெல்லமுடியும் என்பதுதான் எதிரியின் திட்டம்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் போரினால் வெல்ல முடியாத சிறீலங்கா அரசு, தமிழீழ மக்கள் மீதும் இவ்வாறான உபாயம் ஒன்றினையே கட்டவிழ்த்து விட்டுள்ளது. இது, எல்லோருக் கும் தெரிந்த ஒன்றே.



பிடல் காஸ்ட்ரோ

கியூபா, அமெரிக்காவினால் ஒடுக்க முடியாதபடி, புரட்சியில் வெற்றி பெற்றுத் தனிநாடா னதும், அதனைத் தொடர்ந்து, அமெரிக்காவினால் மிகக் கடுமை யான முறையில் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படும் பொரு

ளாதாரத் தடை நடவடிக்கைகளும் சிறந்த உதாரணங்களாகவுள்ளன.

ஆரம்பத்தில், ஸ்பெயின் நாட்டின் அடிமை நாடாக இருந்து வந்த கியூபாவுக்கு விடுதலை கிடைத்தது. பின், அது அமெரிக்காவின் கொலனி நாடாக மாறியது. 'பாடிஸ்டா' என்ற சர்வாதிகாரி, அமெரிக்காவின் ஆதரவோடு கியூபாவின் சனாதிபதியானான். இதனால் அமெரிக்கா, கியூபா மக்களை அடிமைகளாக நடத்தியது. வசதி படைத்த அமெரிக்கர்களின் போகப் பொருட்களாக கியூபாப் பெண்கள் பயன்படுத்தப்பட்டனர். இந்நிலை 1959வரை தொடர்ந்தது

அமெரிக்காவின் ஒடுக்குமுறைக்கெதிராக ஃபிடல் காஸ்ட்ரோவும், ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த சேகுவேராராவும் இராணுவ அமைப்பு ஒன்றை நிறுவி, கடுமையாகப் போராடி வெற்றி பெற்றனர். 1959 ஜனவரி முதல் திகதி ஆட்சியைக் கைப்பற்றினர். கியூபா மக்களை வதைத்த சர்வாதிகாரி அமெரிக்காவிற்குத் தப்பி ஓடினான்.

கியூபா தனது ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றதும், ஒரு பொதுவுடைமை நாடாக மாற்றம் பெற்றதும் அமெரிக்காவை எரிச்சலூட்டியது.

கியூபா தன்னை சோஷலிஸ நாடு என்று அழைத்துக்கொண்டால், பொருளாதாரத் தடையை கியூபா மீது அமெரிக்கா விதிக்கும் என அமெரிக்க அரசு அறிவித்தது. கியூபாவில் உற்பத்தியாகும் சர்க்கரைக்கு அமெரிக்கச் சந்தையில் தடை விதித்தது. கியூபாவிற்குத் தேவையான எண்ணெயை அனுப்பாமல் அமெரிக்கா தடுத்தது. இந்த மிரட்டல்களுக்கு அசைந்து கொடுக்காத கியூபப் புரட்சிகர அரசு கியூபாவில் உள்ள சர்க்கரை ஆலைகளையும், எண்ணெய் ஆலைகளையும் தேசியமயமாக்கியது.

இதனால், மேலும் ஆத்திரமுற்ற அமெரிக்கா, கியூபாவிற்குக் கொடுக்க வேண்டிய அந்நியச் செலாவணியைக் கொடுக்கவில்லை. இதைத் தொடர்ந்து, கியூபா அரசு கியூபாவில் இயங்கிய அமெரிக்கா வங்கிகளை எல்லாம் தேசியமயமாக்கியது.

அமெரிக்காவின் ஆத்திரம் உச்சக்கட்டத்தை அடைய, கியூபாவுடனான தனது சகல வர்த்தக உறவுகளையும் 1960 ஆம் ஆண்டோடு நிறுத்திக்கொண்டது.

இந்நிலையில்தான், சோவியத் யூனியன் கியூபாவிற்கு உதவி செய்ய முன்வந்தது. கியூபாவில் உற்பத்தியாகும் பெருமளவு சர்க்

கரையை வாங்கிக்கொண்டு அமெரிக்கா அனுப்பாமல்விட்ட அனைத்துப் பொருட்களையும் கியூபாவிற்கு அனுப்பி வைத்தது. இதனைத் தொடர்ந்து, கியூபா படிப்படியாகச் சகல துறைகளிலும் நல்ல வளர்ச்சியைக் கண்டது.

சோவியத்யூனியன் சிதறுண்ட துரதிர்ஷ்டவசமான நிகழ்வு 1989 இல் நடந்ததும், சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த அமெரிக்கா, ரஷ்யா கியூபாவிற்கு எந்தப்பொருளையும் அனுப்பக்கூடாது என உத்தரவிட்டது. அதே சமயம், கியூபாவிலிருந்தும் ரஷ்யாவுக்கு எதுவும் வரக்கூடாது எனவும் உத்தரவு போட்டது.

1990 ஆம் ஆண்டிலிருந்து கியூப - ரஷ்யத் தொடர்புகள் சகலதும் துண்டிக்கப்பட்டன. கியூபா மிகப் பெரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கத் தொடங்கியது. உணவு, மருந்துப் பொருட்கள்கூட, வெளிநாடுகளிலிருந்து கியூபாவிற்குச் செல்லவில்லை.

கியூப மக்கள்மீது வறுமையையும், நோய் துன்பங்களையும் பிரயோகித்து, அதன் மூலம் அம்மக்களை கியூப அரசாங்கம் மீது கிளர்ந்தெழச் செய்து, கியூப சோஷலிஸ அரசைக் கவிழ்ப்பதே அமெரிக்காவின் நோக்கம்.

இந்நிலையில், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை ஐந்து நாட்கள் கியூபத் தலைநகரான ஹவானாவில் கியூபாவிற்கான உலக ஆதரவு மாநாடு நடைபெற்றது. சர்வதேச அளவில் 109 நாடுகளிலிருந்து 3072 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். கியூபாவிற்கு எவ்வாறு உதவுவது என்பது குறித்து இந்நாடுகளின் பிரதிநிதிகள் ஆராய்ந்தனர். 1995 ஆம் ஆண்டை, கியூப ஆதரவு ஆண்டாகக் கடைப்பிடிப்பதுபற்றி முடிவெடுக்கப்பட்டது. கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என்று ஐக்கிய நாட்டுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும், தீர்மானம் நடைமுறைக்கு வரவில்லை.

கியூபா கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டி வந்தது. உணவுப்பொருட்கள் தட்டுப்பாடு, எண்ணெய் இல்லை. அதிகமான வாகனங்கள் ஓடாமல் விட்டதால், போக்குவரத்துப் பிரச்சினை; எரிபொருட்கள் இல்லாததால் விவசாயமும் பாதிப்பு. இன்று கியூபாவில் இயந்திரங்களுக்கு எரிபொருளின்றி, விவசாயிகள் மாடு கட்டி ஏர் உழுகின்றனர்.

இவ்வேளையில், இந்நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு கியூபா ஆக்க பூர்வமான முயற்சிகளும் மேற்கொண்டு வருகின்றது.

எரிபொருள் உற்பத்தி, பத்திரிகைத்தாள், மின்சாரம், உணவுப் பொருட்கள் என்பவற்றை கியூபாவிலேயே உற்பத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1990 ஆம் ஆண்டில் 10,000 பெரல் எண்ணெய் உற்பத்தி செய்த கியூபா, இன்று 30,000 பெரல் அளவு வளர்ச்சியடைந்துள்ளது. கூட்டுப்பண்ணைகள் உருவாக்கபட்டு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கியூபாவில் நெருக்கடிகளுடன் வாழும் மக்கள், புத்திஜீவிகள் உட்பட சகல தரத்தினரும் இன்றைய இந்த நெருக்கடிகளுக்கெல்லாம் அமெரிக்காதான் காரணம் என்பதை நன்றாகப் புரிந்து வைத்துள்ளனர். இதனால், அமெரிக்க வல்லாதிக்கத்தைக் கடுமையாக எதிர்ப்பதுடன், தமது நாட்டை வளப்படுத்தவும், புரட்சியைப் பாதுகாக்கவும் உறுதியுடன் உள்ளனர்.

''அருமை நண்பர்களே! நாம் இங்கே, இப்போதே ஒன்றில் உறுதியாக இருக்கவேண்டும். அதாவது, நாம் என்றும் முதலாளித்துவத்திற்குத் திரும்பப் போவதில்லை. காட்டுமிராண்டித்தனமான முதலாளித்துவத்திற்குத் திரும்ப மாட்டோம். தன்னினத்தையே தின்று தீர்க்கின்ற முதலாளித்துவத்திற்குத் திரும்ப மாட்டோம். மிதமான முதலாளித்துவத்திற்கும் திரும்பமாட்டோம். நாங்கள் பின்னோக்கிச் செல்ல மாட்டோம். நமது கடமையையும், கடடுப்பாட்டையும் நாம் நன்கு அறிந்தவர்கள். நாம் ஏற்கனவே மிகக் கடுமையான ஐந் தாண்டுகளைக் கடந்துவிட்டோம். கியூபாப் புரட்சி இந்த மண்ணுலகில் இருந்து விரைவில் காணாமற் போய்விடும் என்று சிலர் கூறிக்கொள்கின்றார்கள்.''

''நாம் விடாப்பிடியாக உழைக்கின்றோம். கடுமையாக உழைக்கின்றோம். மேலும், மேலும் நமது கவனத்தை நம் செயற்பாட்டின் மீது திருப்புகின்றோம். நம்முடைய தவறுகளைக் கண்காணிக்கின்றோம். நம்முடைய குறைபாடுகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றோம். அகநிலைக்கு அழுத்தம் கொடுக்கின்றோம். ஏனெனில், புறநிலைகள் நம்முடையகுறைபாடுகளுக்கு ஒரு சாக்காகமாறி விடக்கூடாது என்பதால்.''சர்வதேச கியூபா ஆதரவு மாநாட்டில்ஆற்றிய நீண்ட உரையின்போது கியூபாத் தலைவர் ஃபிடல்காஸ்ட்ரோ இவ்வாறு குறிப்பிட்டார்.

– புவி




□ அறியாமைஇருள் நீங்க வந்துதித்த சாளரமே! உன்னகத்தே பல் விடயங்களைக் கற்றோம். 'ஆங்கிலம் கற்போம்' அருமை. உன்னிதழ்களைத் தேடிக் காத்திருக்கின்றோம். உனக்கு என் நல்வாழ்த்துக்கள்.

ஸ்ரீ. றஜீவன்
யாழ்ப்பாணம்.

□ இனிய இதயமான சாளரத்திற்கு:- சாளரத்தின் பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். நீண்ட இடைவெளியின் பின் மடல் மூலம் தொடர்புகொள்கின்றேன். இதற்கு முன் நான் அறிவுலகம், பகலவன் பதில்கள் ஆகியவற்றிற்குப் பல வினாக்களை அனுப்பியிருந்தேன். ஒரு வினாவை மட்டுமே பிரசுரித்திருந்தீர்கள். இருந்தும், சில வினாக்களை இத்துடன் அனுப்புகின்றேன். தரமானவற்றைப் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கே. அம்பிக்குமார்
தாளையடி.

□ சாளரத்தில் பலவிதமான - பலதரப்பட்ட விடயங்களையும் கலந்து தருவது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். 'சிரிப்புத் துணுக்கு' கள் கூட, தரமானவையாகவே உள்ளன. 'முன்னோக்கிப் பாய்ச்சல் நடவடிக்கையும் அரசின் புதிய மூலோபாயமும்' பிரயோசனமான தகவல்களைத் தந்த கட்டுரை.

வே. கமலேஸ்வரன்
ஆனைக்கோட்டை.

□ 'நிலாமுற்ற'த்தில் பகிரப்பட்ட கருத்துக்கள் உண்மையானவை; விமர்சிக்கப்படவேண்டியவை. சம்பந்தப்பட்டவர்கள், இனியாவது திருந்துவார்களா

ம. இராஜேஸ்வரி கோப்பாய்.

அறிவுலகம் கேள்வி பதில் அடுத்த இதழில் வரும்.

சிறந்த வேலைப்பாடுகளுடன் கூடிய
தரமான தங்க நகைகளுக்கு

# சிந்துஜா நகை மாளிகை

நம்பிக்கை
நாணயம்
புதுப்புதுரகம்

## சிந்துஜா நகை மாளிகை

539, பிரதான சாலை,
பருத்தித்துறை.

உங்கள் வாழ்வின்
மங்களகரமான நிகழ்வுகளை

# 'ஜனனி' யின் நகைகளுடன் தொடங்குங்கள்!

அழகிற்கு அழகு செய்யும்
அசல் தரமான தங்க நகைகளுக்கு
வேறு எங்கும் நீங்கள் போகத்
தேவையில்லை.

ஞாபகம் வைத்திருங்கள்

## ஜனனி நகை மாடம்

33, பிரதான சாலை - மருதடி,
பருத்தித்துறை.

# பகலவன் பதில்கள்

மு. வேணி
இருபாலை

❁ பாரதியார் கவிதைகள் மட்டுந்தான் எழுதியிருக்கின்றாரா?

● கதைகள், கட்டுரைகள் எழுதியிருக்கின்றார். பத்திரிகைஆசிரியராக இருந்திருக்கின்றார், தமிழில் முதன்முதல் 'காட்டூன்' சித்திரத்தை அறிமுகஞ் செய்தவர் பாரதியார் தான்.

க. சுதா
கிராமிய மேம்பாட்டுப் பிரிவு
தென்மராட்சி.

❁ ஒருவன் மண்ணை நேசிக்க வேண்டும் என்றால், அவன் முதலில் எதை நேசிக்கவேண்டும்?

● மக்களை.

கு. தேவநாயகம்
நாவாந்துறை.

❁ தமிழர்களின் பிரச்சினையைப் புரிந்துகொண்ட சிங்களத் தலைவர்கள் என்று எவரையாவது குறிப்பிடமுடியுமா?

● புரிந்து கொண்டாலும்கூட, அதனை நேர்மையானமுறையில் தீர்த்துவைக்க எவரும் முன்வரமாட்டார்கள்.

''சிங்களத் தலைவர்கள் மத்தியில் ஒரு 'புரட்சியாளர் போராளி' என எவருந் தோன்றவில்லை. நேர்மைக்காகவும் தர்மத்திற்காகவும் போராடவோ, இரத்தம் சிந்தவோ சிங்களத் தலைவர்கள் எவரும் தயாராக இல்லை. பதவிகளையும், சொகுசான வாழ்வையும் இழக்கத்துணிந்தவர் எவரும் இல்லை. பதவிகளைக் கைப்பற்ற, தமிழர் பிரச்சினையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தும் அரசியல்வாதிகள் தாம் உள்ளனர். எனவே, இப்படிப்பட்டவர்களிடம் இருந்து தமிழ் மக்கள் நியாயமான எந்தவொரு தீர்வையும் எதிர்பார்க்க முடியாது.''

-அரசியல் விமர்சகர் ஒருவர்' யாழ்நகரில் நடந்த கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் கூறிய கருத்துக்கள் இவை. இது தான் உண்மையும்கூட.

மா. தேவசுதன்
சாவகச்சேரி

சந்திரிகா அரசு மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வருமா? அரசியல் தீர்வு சாத்தியமாகுமா?

● பேச்சுவார்த்தைகள்வரலாம்; அரசியல் தீர்வு பற்றி எல்லாம் பேசப்படலாம். எல்லாம் அரசியல், இராணுவத் தந்திரோபாயங்களாகவே இருக்கும். இது, அனுபவங்கள் கற்றுத்தந்தபாடம். தனியரசு ஒன்றுதான், தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வு. இது தான், வெளிப்படையான உண்மை. இடையிடையே தோன்றும் காட்சி மாற்றங்களில் சலனப்படாமல், இலக்கை நோக்கிய நகர்வில் நாம் உறுதியுடன் செயற்படல் வேண்டும்.

பு. ஈழநாதன்
உ. அ. மி. கல்லூரி.

பகலவனாரே! கூரையேறிக் கோழிகளைப் பிடிக்கத் தெரியாதவர், (இந்திய இராணுவம்) கப்பலேறித் தமிழீழம்பிடிக்கவரும் சாத்தியமுண்டா?

● கூரையேறிக் கோழிகளைப் பிடிக்க முடியவில்லையே என்ற 'விசரி'ல், கூரையையும் வீட்டையும் கொளுத்த எவரிடமாவது தீப்பந்தம் கொடுத்தனுப்பலாம். நாம்தான் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்.

எஸ். ராஜ்மோகன்
கொடிகாமம்.

எழுத்தாளராக உருவாகுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

● நிறைய வாசிக்க வேண்டும்.

# விடியல் உன் காலத்தில்

சின்னஞ்சிறு விழியே
உன்னகத்தே
மின்னுகின்ற சிந்தனையைக்
கூறாயோ.
அப்பன் குண்டுக்குப் பலியானானோ?
அன்னை உயிரை அரக்கன் குடித்தனனோ?
இன்னும் இவை எத்தனை காலம்?
என ஏங்காதே தளிரே!
விடியல் உன் காலத்திலேயே
கிட்டும்.

ஜுலைமாத
படத்திற்கான
கவிதை.

— பரசுகன்
ஹாட்லிக் கல்லூரி.

# பொது அறிவுப் போட்டி - 13

1) 'எயிட்ஸ்' நோயை உண்டாக்கும் வைரஸ் கிருமி இந்த ஆண்டிலேயே இனங்காணப்பட்டது.

   i) 1981  ii) 1982  iii) 1982

2) 1970 ஆம் ஆண்டு தமிழ் மாணவர்களைப் பாதிக்கும். இது கொண்டுவரப்பட்டது.

   i) வெட்டுப்புள்ளி  ii) சிங்களம் மட்டும்
   iii) தரப்படுத்துதல்

3) தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன் முதலில் வீரச்சாவடைந்த போராளி

   i) சங்கர்  ii) சிவகுமாரன்
   iii) சத்தியநாதன்

4) சிறீலங்கா இராணுவம் நடத்திய 'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கைக்குப் பதிலாக, விடுதலைப்புலிகள் மேற்கொண்ட 'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கை ஆரம்பமான திகதி

   i) ஜூலை 14ஆம் திகதி
   ii) மே 14ஆம் திகதி
   iii) ஜூலை 13ஆம் திகதி

5) I.B.M. என்பது

   i) ஒரு நாட்டின் வானொலி நிலையம்.
   ii) ஒரு நாட்டின் உளவு நிறுவனம்.
   iii) கொம்பியூற்றர்களை உருவாக்கும் நிறுவனம்.

6) உலகின் மிக உயர்ந்த கட்டடம் இங்கே உள்ளது

   i) கலிபோர்னியா
   ii) அமெரிக்கா
   iii) ஜப்பான்

7) தற்போது சிறீலங்கா அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் தெரியாத தமிழ் அமைச்சர் இவர்

   i) எஸ். தொண்டமான்
   ii) லக்ஷ்மன் கதிர்காமர்
   iii) சந்திரசேகரன்

8) முதலாவது அணுக்குண்டு இங்கே வெடிக்க வைக்கப்பட்டது

   i) ஹிரோசிமாவில்
   ii) ஜெர்மன் கடற்கரையில்
   iii) நியூமெக்சிக்கோ பாலைநிலத்தில்

# பொது அறிவுப் போட்டி 12 இற்கான விடைகள்

1) 'ஹைகூ' என்ற கவிதை வடிவம் ஜப்பான் நாட்டினுடையது.

2) 'ஷில்லர்' என்பவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த நூலாசிரியர்.

3) உலகிலேயே அதிகமான நாளிதழ்கள் வெளியாகும் நாடு அமெரிக்கா ஆகும்.

4) 'பெஸ்ரூறெல்லா பாஸ்ரிஸ்' (PESTEURLLA PASTIS) என்னும் பக்ரீறியா பிளேக் நோயை உண்டாக்குகிறது.

5) பாறைகளிலான புவியின் மேற்பரப்பு ஆங்கிலத்தில் 'CRUST' என அழைக்கப்படுகின்றது.

6) இலங்கையின் முன்னாள் பிரதம மந்திரியான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொலைக்குப் பின்னணியில் சி. ஐ. ஏ. இயங்கியதாகக் கருதப்படுகின்றது.

7) 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற தாரகமந்திரம் தலைவர் பிரபாகரனால் 1972 ஆம் ஆண்டு வரையப்பட்டது.

சரியான விடைகளை எழுதியனுப்பியவர்களில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்.

**முதலாம் பரிசு 250 ரூபா**
த. நிவேதினி
மே/பா. V. துரைராஜா
கலைவாணி சனசமூகநிலையம்,
கம்பர் மலை,
வல்வெட்டித்துறை.

**இரண்டாம் பரிசு 150 ரூபா**
T. ஜெகதீசன்
ஆண்டு 11,
யாழ் / கம்பர்மலை அ. த. க. பாடசாலை
வல்வெட்டித்துறை.

**மூன்றாம் பரிசு 100 ரூபா**
கி. உதயணன்
உடுப்பிட்டி அ. மி. கல்லூரி
உடுப்பிட்டி.

'சாளரம்' வழங்கும் இப்பணப் பரிசில்களைச் சாளரம் அலுவலகத்தில் சனிக்கிழமைகளில் பகல் 12 மணிக்கு முன்னதாகப் பெற்றுக்கொள்ளலாம். நேரில் வரமுடியாதவர்கள் கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும்.

நெல்லியடியில்......

# மெடிக்கல் சென்ரர்

சகலவிதமான நோய்களுக்கும் சிகிச்சை
அளிக்கப்படுவதோடு (இரத்தம் சிறுநீர்)
ஆய்வுக்கூட வசதிகளும் எம்மிடம் உண்டு.

## மெடிக்கல் சென்ரர்

பிரதான சாலை, நெல்லியடி.

---

# C. M. E. கல்வி நிலையம்

ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11 வரையிலான மாணவருக்கு, தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

## C. M. E கல்வி நிலையம்

பிரதான சாலை, பருத்தித்துறை.

APR 1997

**பயன்தரும் குறிப்பு**

- குளிர்ச்சி தரும் உணவு, - பயறு, அரிசி, வாழைப்பழம் தயிர்.
- உஷ்ணமான உணவு - பேரிச்சம்பழம், பப்பாசிப்பழம், கத்தரிக்காய், கம்பு, கொண்டைக்கடலை, கோதுமை, தேன், உழுந்து, மீன், துவரம்பருப்பு.
- இலேசான உணவு. (Light Food) - தயிர், பப்பாசி, பயறு, வெந்தயம், அரிசி.
- கடினமான உணவு (Heavy Food) - கொண்டைக்கடலை உழுத்தம் பருப்பு, கோதுமை, கம்பு, பேரிச்சம்பழம், மீன்.
- மருந்தாகப் பயன்படும் உணவு- மஞ்சள், இஞ்சி, வெந்தயம், பால், உள்ளி, கரும்புச்சாறு, தயிர், தேன்.

நெல்மணிகளைத் தரமான
முறையில் குற்றிப் பெற்றிட
**ஈஸ்வரி அரிசி ஆலை**
முடக்காடு, நெல்லியடி.

வடமராட்சியில்—

**சித்திராங்கன் உந்துருளித் தொழிலகம்**

உங்கள் உந்துருளி (மோட்டார் சைக்கிள்) வகைகளைச் சிறந்த முறையில் நாம் திருத்திக் கொடுக்கின்றோம்!

அதுவும், குறித்த, தவணையில் கொடுக்கின்றோம்!

முழுமையான திருத்தத்தின் பின்பு, மூன்று மாத காலத்துக்குள் இலவச மீள் சீரமைப்புச் சேவையினையும் நாம் வழங்குகின்றோம்!

உந்துருளித்திருத்துவதில் நிபுணத்துவம் பெற்றவர்கள்.

**சித்திராங்கன் உந்துருளித் தொழிலகம்**
பிரதான சாலை, பருத்தித்துறை.
(மெத்தைக்கடைச் சந்தி அருகாமையில்)